<u>சுருக்கம்</u>

நினைவகம் – இராமநாதபுரம் மாவட்டம், கமுதிவட்டம், பசும்பொன் கிராமத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 100வது ஜெயந்தி விழா கொண்டாடுதல்– பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்க ரூ.50.00 இலட்ச மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் நிதி ஒதுக்கீடு ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம) செய்தி(நினைவகங்கள்)த் துறை</u>

அரசு ஆணை (நிலை) எண். 273 நாள் 3.7.2007

படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண் 19069/நினைவகம்/2002, நாள் 9.4.2007 (ம) 21.5.2007
2. மாவட்ட ஆட்சித்தலைவர்,இராமநாதபுரம் அவர்களின் க.எண்.சி2/ 82659/ 2006/நாள்29.5.2007.
3. தலைமைப்பொறியாளர்(கட்டடம்),பொதுப்பணித்துறை, அவர்களின் கடித எண் உசெ.செ.பொதொ.18/30610/2005, நாள் 12.6.2007.

********

**<u>ஆணை:–</u>**

2007–2008 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரும் 30.10.2007 அன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதையொட்டி, ரூ.50.00 இலட்சம் செலவில், பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரண வாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்படுவதோடு, அவரது நினைவிடத்தை வழிபடவரும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளார்.

2. முதலாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 100வது ஜெயந்தி விழா கொண்டாடுவதற்கு நிதிநிலை அறிக்கையில்

கூறப்பட்டுள்ள பணிகளை முன்னுரிமைப் பணியாக ரூ.50. 00 இலட்சத்திற்கு மேற்கொள்ள திருத்திய மதிப்பீட்டையும், வரைபடத்தையும் தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் ஒப்புதலுடன் அரசுக்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. அதன் அடிப்படையில் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர், (கட்டிடம்), பொதுப்பணித்துறை அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை 30.10.2007 அன்று அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாட பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியில் கீழ்க்கண்ட

த.பி.பா.



பணிகளுக்கு ரூ.50.00 இலட்ச மதிப்பீட்டில் நடப்பாண்டு விலை விகிதப்படி வரைப்படங்களுடன் தயாரித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மேலோப்பத்துடன் அரசுக்கு அனுப்பி அம்மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டை விரைவில் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நினைவில்லம் புதுப்பித்தல் | 10.10 |
| 2 | நூற்றாண்டு விழாவளைவு | 9.20 |
| 3 | புகைப்பட கண்காட்சி கூடம் | 9.00 |
| 4 | அணையா விளக்கு | 3.70 |
| 5 | நூலக கட்டிடம் | 4.00 |
| 6 | முடி இறக்கும் இடம் | 5.00 |
| 7 | கழிப்பிடம் மற்றும் போர்வெல் வசதி | 9.00 |
| | மொத்தம் | 50.00 |

4. அரசு கவனமான பரிசீலனைக்கு பின்னர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் கருத்துருவை ஏற்று பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் நினைவு இல்லத்தை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியில் கீழே தெரிவிக்கப்பட்ட பணிகளை ரூபாய் 50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நினைவில்லம் புதுப்பித்தல் | 10.10 |
| 2 | நூற்றாண்டு விழாவளைவு | 9.20 |
| 3 | புகைப்பட கண்காட்சி கூடம் | 9.00 |
| 4 | அணையா விளக்கு | 3.70 |
| 5 | நூலக கட்டிடம் | 4.00 |
| 6 | முடி இறக்கும் இடம் | 5.00 |
| 7 | கழிப்பிடம் மற்றும் போர்வெல் வசதி | 9.00 |
| | மொத்தம் | 50.00 |



5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. இச்செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 2059– பொதுப்பணிகள் – 80 – பொது – 053 பராமரித்தலும் செப்பணிடுதலும் I திட்டத்தில் சேராதது – AH நினைவுச் சின்னங்களைப் பராமரித்தல் – 18 பராமரிப்பு –
02 சிறப்புப் பராமரிப்பு (குதொகு 2059 – 80 – 053 – AH – 1827)"

7. இச்செலவினம் ஒரு புதுத்துணைப்பணி குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன் பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் அரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சாரா எண்42131/நிதி (கு.வ,(ம)செய்தி) 2007, நாள் 3.7.2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் 400 (நானூறு) –ன்மூலம் இசைவளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்

அரசு செயலாளர்

பெறுநர்:

தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
பொதுப்பணித் துறை, சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர்,இராமநாதபுரம் மாவட்டம்.
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், சென்னை–9
கண்காணிப்புப் பொறியாளர், கட்டடக் கட்டுமானக் கோட்டம்,
பொதுப்பணித் துறை, சென்னை–5.
செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டடம் மற்றும் பராமரிப்பு கோட்டம்),
இராமநாதபுரம் மாவட்டம்.
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டடம் மற்றும் பரமபரிப்பு),
உதவி கோட்டம் எண் 3, பரமக்குடி.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.
கருவூல அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

த.பி.பா.

நகல்

நிதி (வ.செ.பொ.1/ வ.செ.பொ.2/ த,வ.(ம) செ/பொ.ப.1/வ.செ.2)த் துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை 9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பொதுப் பணித்றை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9.
தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் (ம) செய்தி (கணக்கு/
வரவு–செலவு)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்